எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 48

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்!
அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு
குறித்த வரலாற்றைப் பேசும்
எல்லோருக்கும் எல்லாம்!

பிராமணர்கள், தம்மை இழிவாக நடத்துவதையும் அல்லது பிராமணர்களை விடத் தாழ்ந்தவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வதையும், எந்தவொரு சாதியினரும் விரும்பியதில்லை. அவ்வாறு தாழ்வாக நடத்தப்படும் போது, அதை எதிர்த்துப் பல வழிகளில் கலகம் செய்துகொண்டே இருந்தனர். அத்தகைய மாறுபட்ட எதிர்வினைகள் குறித்து, 1871-ஆம் ஆண்டு மக்கள்தொகை அறிக்கை, பல்வேறு தகவல்களை நமக்கு அளிக்கிறது.

பிராமணரல்லாத பல சாதிகள், தங்களைப் பிராமணருக்கு இணையாகக் கருதினர். குறிப்பாக, கைவினைத் தொழில் புரிந்த கம்மாளர் சாதியினர். தமிழில் இச்சாதியினர் 'கம்மாளர்' என்றும் தெலுங்கில் 'கம்சாலா' அல்லது 'பஞ்சாலா' என்றும், மராத்தியில் 'லோஹிரி' என்றும் அழைக்கப்பட்டனர். 'பாஞ்ச்' என்றால் 'ஐந்து'. 'பஞ்சாலா' என்றால் 'பொற்கொல்லர்', 'இரும்புக்கொல்லர்', 'செம்பு பித்தளைக் கொல்லர்', 'தச்சர்', 'கற்கருவி செய்வோர்' ஆகிய ஐந்து கைவினைக் கலைஞர்களைக் குறிக்கும். 'இச்சாதியினர் தங்களைப் பிராமணர்களுக்கு ஒப்பானவர்கள்' என்று கருதிக்கொண்டனர்.

தென்னிந்தியாவில், குறிப்பாக, தமிழ்நாட்டில் இருந்த 'கொல்லர் சாதியினர்' தங்களை 'ஆச்சாரி' என்றும் 'விஷ்வ பிராமணர்கள்' என்றும் அழைத்துக் கொண்டனர். பூணூலும் அணிந்துகொண்டனர்.

கொல்லர் சாதியினர் தங்களை 'விஷ்வ பிராமணர்', 'ஆச்சாரி' என்று அழைத்துக் கொண்டாலும், பூணூல் அணிந்துகொண்டாலும், பிராமணர்கள் இவற்றையெல்லாம் ஒரு பொருட்டாக மதித்ததில்லை. இருப்பினும், நாங்கள் பிராமணர்களுக்கு இணையானவர்கள் என்று வலியுறுத்துவதையோ, பூணூல் அணிவதையோ கம்மாளர்கள் கைவிடவில்லை.

சென்னை மாகாணத்தில் 2.7 சதவிகிதம் அளவில் 'கம்மாளர்கள்' இருந்தனர். சென்னை மாகாணத்தின் ஒட்டுமொத்த கம்மாளர் சாதி ஆண்களில் '63.9' சதவிகிதத்தினர் கொல்லர் தொழில் அல்லது அதற்குத் தொடர்புடைய வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில், பாதிபேர் உலோகத்துடன் தொடர்புடைய தொழிலிலும், 18.8 சதவிகிதத்தினர் தச்சுத் தொழிலிலும், 6.3 சதவிகிதத்தினர் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்தனர். பரம்பரை பரம்பரையாக தமது குழந்தைகளையும் குலத்தொழிலில் ஈடுபடுத்தினர்.

ஆங்கிலேயர் கொண்டு வந்த கலைத்திறன்!

'நீண்ட காலம் ஒரே தொழிலில் இருந்தாலும், தொழில்நேர்த்தியும் திறன்மேம்பாடும் ஆங்கிலேயர்கள் வந்தபின்னரே ஏற்பட்டன. அதற்குக் காரணம், நகைச் சந்தையின் தேவை இல்லாமல் இருந்ததே. இந்தியாவில் நகைகளை அணிபவர்கள் வடிவமைப்பு அல்லது கலைத்திறன் ஆகியவற்றின் சிறப்பைக் காட்டிலும், நகையின் உள்ளார்ந்த மதிப்பை அதிகம் மதித்தனர். அதன்விளைவாக, நகை செய்யும் கைவினைக் கலைஞர்கள் தங்கள் கலைத்திறனை மேம்படுத்திக் கொள்ளத் தேவை ஏற்படவில்லை. மேலும், இந்தியர்கள் நகை வடிவமைப்புச் செலவு குறைவாக இருக்கவேண்டும் என்றும் விரும்பினர்.

இந்தக் காரணிகளால் இந்தியக் கைவினைஞர்களின் கலைத்திறன் சாதாரண நிலையில்தான்

ஓவியம் : ரவி பேலட்

புராணக் கதை உண்மையை மாற்றுமா?

இருந்தது. ஆங்கிலேய ஆட்சியில் அதிகரித்த சந்தைத் தேவைகளின் விளைவாக, இந்நிலை மாற ஆரம்பித்தது,' என்கிறார், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அதிகாரி டபிள்யூ.ஆர். கார்னிஷ்.

கொல்லர் சாதியினர் தங்களை 'விஷ்வ பிராமணர்' என்று அழைத்துக்கொண்டாலும், கல்வியறிவில் பிராமணர்களை ஒப்பிடுகையில், மிகவும் பின்தங்கியிருந்தனர். பிராமணர்களின் கல்வியறிவு 40.7 சதவிகிதத்தினர். ஆனால், 18.4 சதவிகிதம் கம்மாளர் சாதியினரே கல்வியறிவு பெற்றிருந்தனர். ஒப்பீட்டளவில் கணக்கன் (37.2) சாதியினரைத் தவிர்த்து, வேறு எந்தச் சாதியினரும் பிராமணர்களுக்கு இணையான கல்வியறிவு பெற்றிருக்கவில்லை.

அனைத்தும் பெற்ற ஒருசாரார்

ஒரு புறம் பிராமணர்களுக்கு உயர்வு. அவர்கள் விரும்பிய அனைத்தும் அவர்களுக்குக் கிடைத்தன. மறுபுறம் பிராமணரல்லாத சாதியினர். தங்களைப் பிராமணர்களுக்கு இணையானவர்களாகக் கருதிக்கொண்ட பொற்கொல்லர் முதல், அடிமைகளாக இருந்த சாதியினர் வரை பிராமணரல்லாத சாதியில் அடக்கம். இவர்கள் கல்வியில், வேலைவாய்ப்பில் மிகவும் பின்தங்கியிருந்தனர். சாதியால்

எந்தச் சாதியினரும் அடிமைகளாக மாறலாம் அல்லது அடிமைகளாக மாற்றப்படலாம். ஆனால், பிராமணர்களை மட்டும் யாராலும் அடிமையாக மாற்ற முடியாது. இந்த நிலை எப்போது மாறும்?

ஒடுக்கப்பட்டிருந்தவர்கள், சாதியை எதிர்த்து பலவழிகளில் போராடினர்.

ஏனையோரை விட, பிராமணர்கள் உயர்ந்தவர்கள் என புராணங்களும், கதைகளும் கூறியதால், கீழ்நிலையில் இருந்த சாதியினர் பிராமணர்களின் சிறப்பை விமர்சிப்பதின் மூலம், பிராமணர்களை விடத் தங்களை உயர்ந்தவர்கள் என்று நிறுவ முயன்றனர்.

1901-இல் வெளியான 'வருண சிந்தாமணி' எனும் நூல் சைவ வேளாளர்கள் பிராமணர்களை விட, மேலானவர்கள் என்றும் சூத்திரர்கள் அவர்களுக்குத் தாழ்ந்தவர்கள் என்றும் நிறுவ விரும்பியது. பனையேறும் சாதியில் பிறந்து, கள்ளுக்கடையைக் குத்தகைக்கு எடுத்து வியாபாரம் செய்த 'கிராமணி' சாதியினர் தங்கள் சாதி உயர்ந்ததென, 1904-இல் வெளியான **'ஷத்திரிய குல விளக்கம்'** எனும் நூலில் நிறுவ முயன்றனர். தாங்கள், 'சூத்திரர்கள்' அல்ல 'சத்திரியர்கள்' என்பது அவர்கள் கூற்று. பிராமணர்கள், ஜனகன் முதலிய சத்திரியர்களிடம் இருந்துதான் உயர்ந்த அறிவைப் பெற்றனர். அந்த வகையில், பிராமணர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் 'குரு' எனும் உயர்ந்த நிலையில் கிராமணிகள் இருந்தார்கள் என்பது அவர்களின் வாதம். சான்றோர் எனும் சொல் தங்கள் சாதியைக் குறிக்கிறது என்று நாடார்கள் 'நாடார் மன்னரும் நாயக்க மன்னரும்' என்ற நூலில் நிறுவ முயன்றனர். தம்மை,'பாண்டிய மரபினர்' என்றும் அழைத்துக்கொண்டனர்.

1909-இல் வெளியான 'பரவர் புராணம்' எனும் நூல், பாரதம் முழுவதையும் ஆண்ட பரதன் வழி வந்தவர்களே, 'பரதவர்கள்' என்று கூறுகிறது. இந்திரலோகத்திலிருந்து நெல்லும் கரும்பும் கொண்டு வந்ததால், 'பள்ளர்கள்' தம்மை 'தேவேந்திரகுல வேளாளர்கள்' என்று கூறிக்கொண்டனர். இப்படிப் பல்வேறு நூல்கள், பல்வேறு கதைகள். கதைகள் பலவாக இருப்பினும், அவற்றுக்குள் ஒரு ஒற்றுமை இருந்தது. தங்களை உயர்ந்த சாதி என்று பழங்காலக் கதைகள் மூலம் ஒவ்வொருவரும் நிறுவ முயன்றனர். ஆனால், உண்மை நிலவரம் என்ன?

அடிமைப் பணி நிலை

இந்து மதச் சட்டம் ஐந்துவகை சேவைப் பணிகளை அங்கீகரித்தது என்கிறது 1871-ஆம் ஆண்டின் மக்கள்தொகை அறிக்கை. முதல் நான்கு வகை சேவைப் பணிகளைச் செய்தால், எவ்விதக் கண்ணியக் குறைபாடும் ஏற்படுவதில்லை. இழிவுவேலைகள் என்று கருதப்பட்ட சேவைப் பணி அடிமைச் சாதியினருக்கு ஒதுக்கப்பட்டது. தூய்மையற்ற இடங்களைத் துடைத்து சுத்தம் செய்தல், நோயுற்ற காலங்களில் நோயாளிகளின் அசுத்தங்களைச் சுத்தம் செய்தல், மலம் அகற்றுதல் உள்ளிட்ட கண்ணியக் குறைவான அனைத்து வேலைகளும் அடிமைச் சாதியினருக்கு ஒதுக்கப்பட்டன.

அடிமைப்பெண்களுக்குப் பிறந்தவர்கள், விலைக்கு வாங்கப்பட்டவர்கள், தற்செயலாகக் கிடைத்த அடிமைகள், பரம்பரை அடிமைகள், பஞ்ச காலங்களில் உணவளிக்கப்பட்டு உயிருடன் இருப்பவர்கள், வாங்கிய கடனுக்கு அடமானம் கொடுக்கப்பட்டவர்கள், வாங்கிய கடனுக்கு கட்டுப்படுபவர்கள், சண்டையில் பிடிபட்டவர்கள், சூதாட்டக் கடனை அடைக்க முடியாதவர்கள், சொந்த விருப்பத்தால் அடிமைகளாக மாறியவர்கள், மதத் துரோகிகள், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அடிமைகள், வாழ்வாதாரத்திற்காக அடிமைகள், அடிமைப் பெண்களை விரும்பியதால் அடிமைகளானவர்கள், தன்னார்வ விற்பனை மூலம் அடிமைகளானவர்கள் என பதினைந்து வகையான அடிமைகள் இந்து மதச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டனர்.

முதல் நான்கு அடிமைகள் எஜமானர்களின் அனுமதியின்றி, அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற இயலாது. ஏனைய வகை அடிமைகள் சில நிபந்தனைக்கு உட்பட்டு, அடிமைத்தனத்திலிருந்து விடுபட இயலும். அடிமைப்பெண்கள் தங்கள் எஜமானருக்குக் குழந்தை பெற்றுக் கொடுத்தால் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படலாம். எந்தச் சாதியினரும் அடிமைகளாக மாறலாம் அல்லது அடிமைகளாக மாற்றப்படலாம். ஆனால், பிராமணர்களை மட்டும் யாராலும் அடிமையாக மாற்ற முடியாது. இந்த நிலை எப்போது மாறும்?

...குரல் ஒலிக்கும்

துலங்கும் தொல்தடம்!

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் 'தொல்லியல் – கலைப்பண்பாட்டியல் சார்ந்த ஆய்வுகள்' அறிவியல் துணை கொண்டு புதிய வெளிச்சங்களைப் பாய்ச்சி வருகின்றன. அந்த ஆய்வுகளின் உச்சமாக சமீபத்தில், தமிழ்நாட்டின் இரும்புக்காலம் குறித்து, வெளியான அறிக்கை இந்திய தொல்லியல் துறைக்கே புதிய திருப்பு முனையை உருவாக்கக் கூடியது.

'கீழடி அருங்காட்சியகம்' தொடங்கி, இரும்பின் காலம் தொடர்பான ஆய்வுகள் வரை, தமிழர்களின் நாகரிகம் குறித்து, மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதனை முன்னெடுக்கும் விதமாக, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் இணைந்து தொல்லியல் கலைப்பண்பாட்டியல் ஆய்விதழை, மின்னிதழாக வெளியிடத் திட்டமிட்டுள்ளன. இந்த மின்னிதழ் ஆண்டிற்கு மூன்று என்கிற அளவில் வெளிவரவுள்ளது.

இந்த ஆய்விதழில், பண்டைய வரலாறு, தொல்லியல், கடல்சார் தொல்லியல், தொல்லியல் சார்ந்த புதிய கண்டுபிடிப்புகள், கல்வெட்டு இயல், கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, பாறை ஓவியம், நடுகற்கள், நாணயவியல், பண்டைய இலக்கியம், மானிடவியல், நாட்டார் வழக்காற்றியல், மொழியியல், மரபணுவியல், புவியியல் பிற அறிவியல் துறைகள் மற்றும் பண்பாட்டுச் சின்னங்களைப் படியெடுத்தல், பாதுகாத்தல், மீட்டுருவாக்கம் செய்தல் தொடர்பான கட்டுரைகள், தொல்லியல் -கலைப்பண்பாட்டியல் தொடர்பான நூல் அறிமுகம் மற்றும் மதிப்புரை உள்ளிட்ட தலைப்புகளில் கட்டுரைகள் இடம் பெறவுள்ளன.

இதழில் எழுதுவதற்கு ஆர்வமுள்ள அறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், ஆய்வு மாணவர்கள், வரலாற்று ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் 'தொல்தடம்' இதழ் சார்பில், அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தொல் தமிழர்களின் நாகரிகத்தை, கடைக்கோடி தமிழனுக்கும் கொண்டு சேர்க்கட்டும் 'தொல் தடம்'

:ப்ளாஷ்பேக்

பிறந்த நாள் வாழ்த்து!

அ.சலாவுதீன்

31/03/2009 அன்று என்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு, அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் தளபதி அவர்களை சந்திக்க குடும்பத்துடன் தலைமைச் செயலகம் சென்றோம். எங்களை நலம் விசாரித்து, கரூர் மாவட்டத்தில், கட்சி நிலைமைகளை எல்லாம் கேட்டறிந்து பிறந்த நாள் வாழ்த்தும் தெரிவித்தார். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

-அ.சலாவுதீன், தலைமைக் கழகப் பேச்சாளர், குளித்தலை, கரூர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

கருவூலம்

பாதை மாறிய நேரு!

1957-ஆம் ஆண்டு, பெரியாரை இழிவாகப் பேசியதற்காக, பிப்ரவரி 6-ஆம் தேதி தமிழ்நாடு வந்த பிரதமர் நேருவுக்கு எதிராக, கழகம் நடத்திய கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில், தி.மு.கழகத்தின் எம்.எல்.ஏக்கள் 14 பேரும், எம்.பி.க்கள் 2 பேரும் கைதாகினர். பல நடிகர்களும் கைதாயினர். மீனம்பாக்கத்திலிருந்து அண்ணா சாலை வரை கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் காரணமாக பிரதமர் நேரு மாற்றுப் பாதையில் அழைத்துச் செல்லப்பட்டார்.

திராவிடத்தால் வாழ்கிறோம்

740

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131